Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

4.7.2026
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

## தெற்கு செபராங் பிறையில் (SPS) ரிம8.1 மில்லியன் மதிப்பிலான "சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்பு நிலையம்"

- **தற்காலிகத் தீர்வாக, SPS பகுதியில் நாளொன்றுக்கு கூடுதலாக 6.4 மில்லியன் லிட்டர் (MLD) சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகிக்கப்படுகிறது.**

பினாங்கு, சனிக்கிழமை, 4.7.2026: அதிகளவு சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்து விநியோகிக்கும் நோக்கில், PBAPP நிறுவனம் 2025, மார்ச் முதல் தெற்கு செபராங் பிறை(SPS) பகுதியில் "சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்பு நிலையம்" (Compact WTP) ஒன்றை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

பினாங்கு மற்றும் பேராக் மாநிலங்களுக்கு இடையிலான இயற்கை எல்லையாக விளங்கும் சுங்கை கெரியான் ஆற்றிலிருந்து நீரைப் பெற்று, இந்தச் சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்பு நிலையம் (Compact WTP) நாளொன்றுக்கு அதிகபட்சமாக 6.4 மில்லியன் லிட்டர் (MLD) சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்கிறது.

இங்கு சுத்திகரிக்கப்படும் நீர், அருகிலுள்ள சுமார் 4,000 பயனீட்டாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. மேலும், SPS பகுதியில் தொடர்ந்து அதிகரித்து வரும் நீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான 3 ஆண்டுகால இடைக்காலப் பொறியியல் தீர்வாக இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

## தெற்கு செபராங் பிறையின் (SPS) நீர் விநியோகம் தொடர்பான முக்கியத் தகவல்கள்

மலேசியப் புள்ளியியல் துறையின் (DOSM) தகவலின்படி, 2025ஆம் ஆண்டில் SPS-இன் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை 189,500 ஆகும்.

PBAPP-இன் பதிவுகளின்படி, SPS பகுதியில் 87,611 பதிவு செய்யப்பட்ட நீர் பயனீட்டாளர்கள் உள்ளனர்.

2025ஆம் ஆண்டில் SPS பகுதியில் சராசரி தினசரி நீர் பயன்பாட்டு 116.8 MLD ஆக பதிவாகியுள்ளது. இது பினாங்கு மாநிலத்தின் மொத்த சராசரி தினசரி நீர் பயன்பாட்டில் 865 MLD-இல் சுமார் 13.5% ஆகும்.

இருப்பினும், சுமார் 165 ஹெக்டேர் பரப்பளவில் ரிம2.2 பில்லியன் முதலீட்டில் உருவாக்கப்பட்டு வரும் 'பத்து கவான் தொழில் பூங்கா 3' (BKIP 3) திட்டத்தின் காரணமாக, SPS பகுதியில் நீர் பயன்பாடு கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2030-ஆண்டில் BKIP 3 பகுதியில் மட்டும் எதிர்பார்க்கப்படும் தினசரி நீர் பயன்பாடு சுமார் 220 MLD ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஸ்கைவேர்ல்ட் காசியா சொத்துடைமை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் எஸ்.பி.எஸ்-இல் முன்மொழியப்பட்ட சிலிக்கான்வேர் பிரசிஷன் குறைக்கடத்தித் தொழிற்சாலை ஆகியவையும் 2030-களில் நீர் பயன்பாட்டை அதிகரிக்கும்.

**SPS-க்கான PBAPP-இன் நடுத்தர மற்றும் நீண்ட கால நீர் தீர்வுகள்**

தற்போது, SPS இல் PBAPP வழங்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர் 3 முக்கிய நீர் சுத்திகரிப்பு நிறுவல்களில் இருந்து வருகிறது: வட செபராங் பிறையில் உள்ள சுங்கை டுவா WTP, SPS இல் புக்கிட் பஞ்சோர் WTP மற்றும் சுங்கை கெரியானில் உள்ள காம்பாக்ட் WTP ஆகியவை இதில் அடங்கும்.

SPS பகுதிக்கு விநியோகிக்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் அளவை மேலும் அதிகரிக்க, சுங்கை கெரியான் நீராதாரத்தைப் பயன்படுத்தும்

புதிய 80 MLD திறன் கொண்ட 'build-operate-transfer' (BOT) முறைமையிலான நீர் சுத்திகரிப்பு நிலையத்தை (WTP) 2027-ஆம் ஆண்டிற்குள் PBAPP பயன்பாட்டிற்குக் கொண்டுவரும். இத்திட்டம் குறித்த கூடுதல் தகவல்கள் விரைவில் வெளியிடப்படும்.

2030ஆம் ஆண்டிற்குள், SPS பகுதியில் நீர் விநியோக சேவைகளை மேலும் சீராக்கும் நோக்கில், PBAPP-இன் நீர் அவசரகாலத் திட்டத்தின் கீழ் 114 MLD சுங்கை கெரியான் நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2030-களில் போதுமான நீர் விநியோகத்தை உறுதிசெய்யும் வகையில், 2031-ஆம் ஆண்டிற்குள் 'பேராக்-பினாங்கு நீர் திட்டம்' (P-PWP) செயல்பாட்டுக்கு வர வேண்டும்; இத்திட்டம் பேராக் பகுதியிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை (தினசரி 300 முதல் 500 மில்லியன் லிட்டர் வரை) SPS பகுதிக்கு வழங்கும். இத்திட்டத்தின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீர் SPS மற்றும் SPT பகுதிகளில் உள்ள பயனீட்டாளருக்கு விநியோகிக்கப்படும்.

பினாங்கு மாநில முதலமைச்சர் மேதகு சாவ் கொன் இயோவ் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், 2030-களில் போதுமான நீர் விநியோகத்தை உறுதி செய்யும் வகையிலான வலுவான மற்றும் நடைமுறைக்கு ஏற்ற நீர் விநியோகத் தீர்வுகளைச் செயல்படுத்தும் பணிகளில் PBAPP ஈடுபட்டுள்ளது. நீர் விநியோகப் பற்றாக்குறையால் பினாங்கின் வளர்ச்சி தடைபடுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

நன்றி.

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : comms@pba.com.my